செ.வெ.எண்:30 நாள்:13.04.2018

**அடைக்கப்பட்ட குடிநீர் பாட்டில்கள் (Packaged Drinking Water) நிறுவனங்களில் தயாரிக்கப்பட்ட குடிநீரின் தரத்தை பொதுமக்கள் தெரிந்துகொள்ள மாவட்ட ஆட்சியரின் அறிவிப்பு**

கரூர் மாவட்டத்தில் இயங்கி வரும் அடைக்கப்பட்ட குடிநீர் பாட்டில்கள் (Packaged Drinking Water) நிறுவனங்களில் தயாரிக்கப்படும் குடிநீரின் தரத்தை, பொதுமக்கள் தாங்களாகவே தெரிந்து கொள்ளும் வண்ணம், உணவு பாதுகாப்பு துறையின் இணையதளமான https://safewater.fssai.gov.in/CleanWater/home என்ற இணையதளத்தில் உள்ள webportal என்னும் தரவினை பயன்படுத்தி, மேற்படி குடிநீர் உற்பத்தியாளர்களின், ISI எண் அல்லது உணவு பாதுகாப்பு உரிமம் எண்ணை (FSSAI) உள்ளீடு செய்து, மேற்படி நிறுவனத்தில் தயாரிக்கப்பட்ட குடிநீரின் 06 மாதம் மற்றும் 01 வருட பரிசோதனை அறிக்கை மற்றும் அவர்களின் ISI மற்றும் FSSAI எண் கால அவகாசம், பயன்பாடு போன்ற விவரங்களை பொதுமக்கள் பார்வையிட்டு, குடிநீரின் தரத்தை அறிந்துகொள்ளலாம்.

மேலும், பொதுமக்கள் வாங்கும் ஒவ்வொரு தண்ணீர் பாட்டில்கள், தண்ணீர் பாக்கெட்டுகள் மற்றும் 20 லிட்டர் கேன்களிலும் அதன் தயாரிப்பாளர் ISI எண் மற்றும் உணவு பாதுகாப்பு துறை FSSAI உரிமம் எண் இரண்டையும் கட்டாயம் பதிவிட்டிருக்க வேண்டும். இந்த இரண்டு எண்களில் ஏதேனும் ஒரு எண்ணை மட்டும் வைத்து கொண்டு, இந்த இணையதளத்தை பயன்படுத்தி, அங்குள்ள செயலில் குடிநீர் நிறுவனத்தின் பெயரை பதிவேற்றம் செய்தால் அந்த நிறுவனத்தின் ISI தரம் FSSAI தரம் தற்போது செயல்பாட்டில் உள்ளதா மற்றும் இந்த நிறுவனத்தின் தண்ணீர் ஆய்வக அறிக்கையையும் தாங்கள் பார்த்து அறிந்துகொள்ள உணவு பாதுகாப்பு துறை சார்பாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதை பொதுமக்கள் பயன்படுத்திகொள்ளுமாறு கேட்டுகொள்ளப்படுகிறது.

மேலும் இது குறித்து ஏதேனும் புகார்கள் இருந்தாலோ அல்லது மற்ற உணவுப் பொருட்கள் குறித்து புகார்கள் இருந்தாலோ எங்களது வாட்ஸப் புகார் எண் **9444042322** என்ற இந்த எண்ணிற்கு புகார் தெரிவிக்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுறார்கள்.

**வெளியீடு:**
**செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,**
**கரூர்.**